பொறுப்புகளில் நாம் இன்னும் அதிகமாக அக்கறைக் கொள்வதும் செயல்படுவதும் தேவை என்பதை உணர்கின்றோம்.

குழந்தைகளை மாண்புடன் நடத்த வேண்டும்; அவர்களுக்கு வாழ்வின் அழகினைக் கற்றுக் கொடுக்க வேண்டும்; அவர்கள் நம்மிடமிருந்து நன்னெறிகளையும் நம்பிக்கையையும் கற்றுக்கொள்ள வேண்டும்; வாழ்வின் சவால்களை எதிர்கொள்ளும் திறன்களை அவர்களிடம் நாம் வளரச் செய்யவேண்டும் என திருத்தந்தை பிரான்சிஸ் விடுக்கும் அழைப்பை ஏற்று, பாலர்சபை விழாவைச் சிறப்பிக்க முன் வருவோம்.

பாலர்சபை தினம் அன்று நம் பங்குத்தளங்களில் சிறாருக்கென சிறப்பு நிகழ்வுகளைத் திட்டமிட்டு நிறைவேற்ற உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். குழந்தைகளுக்கு உற்சாகம் தருகின்ற நிகழ்ச்சி, சிறார்களின் தேவைகள் குறித்த விழிப்புணர்வு, சிறார் நலனுக்கான திட்டமிடுதல் ஆகியன நலமாக அமையும்.

நல்வாழ்வு மறுக்கப்படுகின்ற சிறாருக்கென வருகின்ற ஞாயிறு பிரிக்கப்படும் காணிக்கையில் மனமுவந்து கொடுத்திடவும் கேட்டுக்கொள்கின்றேன்.

குழந்தை இயேசுவின் அன்பும் அருளும் என்றும் உங்களை நிரப்பட்டும்.

கிறிஸ்துவின் மனநிலையில்,

-sd-

ஆயர் நசரேன் சூசை

கோட்டாறு மறைமாவட்ட ஆயர்

---

குறிப்பு: இச்சுற்றுமடல் 03-02-2019 ஞாயிறு திருப்பலியில் வாசிக்கப்பட வேண்டும்.